ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 128/2024 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : சேகர் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : முனியாண்டி |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2025

( எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1081/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)**

3. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்வி பட்டு தான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல, எனது மாமா விபரம் சொல்ல புகார் எழுதப்பட்டு அதற்கு பிறகு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஒரு வாரம் கழித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து புகார் கொடுத்தோம். போலீசார் விசாரணையில் எதிரி மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்ததாக தெரிவித்தேனா என்றால் இல்லை. இறந்ததற்கு பிறகுதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்ததாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து எனது மகளை பார்க்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட சத்யாவை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக இருந்தால் தவறு என்றால் சரிதான், எனது மனைவி மற்றும் அவரது அப்பா சேர்ந்து எனது மகளை முதலுதவிக்காக மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். எனது மகளுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். அவருக்கு வண்டி ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. அந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் அந்த புகாரின் பேரில் என்னிடம் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றாலும், அந்த புகார் மனுவை தாக்கல் செய்தால் தான் உண்மை நிலை என்ன என்பதை அறிய முடியும் என்றால் சரியல்ல.

5. எதிரி தெற்கில் இருந்து வடக்கு நோக்கி தவறான பாதையில் வந்ததாக புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சத்யாவிற்கு வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரியல்ல, வலது காலில் சிராய்ப்பு காயம் இருந்தது, உள்காயங்கள் இருந்தது. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், விபத்து இழப்பீடு தொகை பெற வேண்டி பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி வரவில்லை என்றாலும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.09 17:03:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 128/2024 | LW- | 4 | PW- | 4 |

| | |
|---|---|
| Name | : லெட்சுமி (கேள்வியுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சேகர் |
| Village | : சின்னையம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 42/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2025

( எதிரி ஆஜரில்லை. பிரிவு 355 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சி மனு எண்.1081/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை)**

3. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் கடை தெருவிற்கு சென்றிருந்த நபர் ஒருவர் சொல்லி தான் சம்பவம் பற்றி தெரியும். தகவல் தெரிந்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். சம்பவ இடத்திற்கு ஐந்து நிமிடத்தில் சென்றேன். முதல் விசாரணையில் சொல்லிய விபரங்களை தான் போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன். நானும், எனது கணவரும் சம்பவ இடத்திற்கு சென்று எனது மகளை பார்த்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லப்பட்டிருந்தால் தவறானது என்றால் சரிதான். விபத்து நடந்து புகார் கொடுத்த பிறகு போலீசார் விசாரிக்கும் போது எதிரி மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என்று சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு

சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் இழப்பீடு பெற வேண்டி எனது கணவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி வரவில்லை என்றாலும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.09 17:03:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்